தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வியாழக்கிழமை, 1978 ஆகஸ்ட் 31.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. இரங்கல் குறிப்புகள்.

முன்னாள் உறுப்பினர்களின் மறைவு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. துரைராஜ் பாண்டியன் அவர்கள் 20–4–1978-ஆம் தேதியன்றும், திரு. தோட்டா ராமசாமி அவர்கள் 17–5–1978-ஆம் தேதியன்றும், திரு. எம். ஏ. ஈஸ்வரன் அவர்கள் 22–5–1978-ஆம் தேதியன்றும் திரு. எஸ். கந்தசாமி கவுண்டர் அவர்கள் 21–6–1978-ஆம் தேதியன்றும், திரு. எஸ். நாகராஜ மணியகார் அவர்கள் 21–7–1978-ஆம் தேதியன்றும், திரு. கா. ஆ. சண்முக முதலியார் அவர்கள் 17–7–1978-ஆம் தேதியன்றும் மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரைராஜ் பாண்டியன் 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரை திருநெல்வேலி பொது ஊரகத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, அன்றைய ஒருங்கிணைந்த சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராக நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. தோட்டா இராமசாமி அவர்கள் ஆந்திரா மாநிலத்தில் அமைச்சர் ஆகவும், 1972 ஆம் ஆண்டிலிருந்து 1974 ஆம் ஆண்டு வரை ஆந்திரா மாநில மேலவைத் தலைவராகவும் பணியாற்றினார்கள். 1952 ஆம் ஆண்டிலிருந்து 1953 ஆம் ஆண்டு வரை பெத்தாபுரம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அன்றைய ஒருங்கிணைந்த சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராக இருந்து சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எம். ஏ. ஈஸ்வரன் அவர்கள், 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரை ஈரோடு பொது ஊரகத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அன்றைய ஒருங்கிணைந்த சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராக சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. எஸ். கந்தசாமி கவுண்டர், 1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரை அரவக்குறிச்சி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அன்றைய ஒருங்கிணைந்த சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராக சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. எஸ். நாகராஜ மணியகார், 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரை ஹோசூர் பொது கிராமப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அன்றைய ஒருங்கிணைந்த சட்டமன்றப் பேரவையிலும் 1957 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரை கிருஷ்ணகிரி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. கா. ஆ. சண்முக முதலியார், 1937 ஆம் ஆண்டிலிருந்து 1939 ஆம் ஆண்டுவரை வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பத்தூர் பொது கிராமப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அன்றைய ஒருங்கிணைந்த சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக பணியாற்றியுள்ளார்கள்.

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த வருத்தத்தையும் அனுதாபத்தையும் இரங்கலையும் இப் பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிட நேரம் மௌனமாக எழுந்து நின்றனர்.)

2. ஒழுங்குப் பிரச்சினைகள்.

அ. படகு விபத்தில் உயிர்நீத்த மாணவர்களுக்கு இரங்கல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் வினா எண் 1.

திரு. துரை முத்துசாமி : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். சமீபத்தில் படகு விபத்தில் உயிர் நீத்த . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரை முத்துசாமி அவர்களுக்கு சட்டமன்ற விதிகள் நன்கு தெரியும். கேள்வி நேரத்தின்போது ஒழுங்குப் பிரச்னை எழுப்புவது நியாயம் இல்லை. தயவுசெய்து கேள்வி நேரம் முடிந்த பிறகு. . . .